## திருப்பலி முன்னுரை

## ஆண்டவரின் விண்ணேற்றத் திருவிழா (A) 2026

திருவிவிலிய வாசகங்கள்:

திருத்தூதர் பணிகள் 1:1-11

எபேசியர் 1:17-23

மத்தேயு 28:16-20

சில ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு சிறுமி தனது கையில் காகிதத்தால் செய்யப்பட்ட ஒரு சிறிய காகித விமானத்துடன் விளையாட்டு மைதானத்தில் நின்றுகொண்டிருந்தாள். அந்த விமானம் மிகவும் தொலை தூரம் பறந்து செல்ல

வேண்டும் என்பது அவளின் ஆவலான விருப்பமாக இருந்தது. தனது முழு வலிமையுடன் அந்த காகித விமானத்தை வானத்தை நோக்கி எறிந்தாள்.

சில நொடிகள் அது உயரமாக பறந்தது. பின்னர் மெதுவாக கண்களுக்கு தெரியாமல் மறைந்து போனது அதை பார்த்த சிறுமி ஏமாற்றத்துடன்,“அது கீழே விழுந்துவிட்டது…” என்று சொன்னாள்.

அப்போது அவளது அருகில் நின்றிருந்த அவளுடைய ஆசிரியை புன்னகையுடன் கூறினார்:

“இல்லை… அந்த காகித விமானம் இன்னும் வானில் பறந்துக்கொண்டேதான் இருக்கிறது.உன் கண்களுக்கு மட்டும் அது தெரியவில்லை.அதன் பயணம் இப்போதுதான் ஆரம்பமாகியுள்ளது.” என்றார்

அன்பிற்கினியவர்களே,இன்றைய ஞாயிறு தினத்தில் நாம் ஆண்டவரின் விண்ணேற்றத் திருவிழாவைக் கொண்டாடுகிறோம். காகித விமானம் கண்களுக்கு மறைந்தாலும் அதன் பயணம் தொடர்ந்தது போலவே, இயேசு நம் கண்களுக்கு மறைந்தது ஒரு பிரிவோ முடிவோ அல்ல; மாறாக அது ஒரு புதிய பணியின் தொடக்கம். அந்த இறைப்பணி இன்று வரை திருச்சபையிலும், நம்முடைய வாழ்விலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

உயிர்த்தெழுந்த பிறகு நாற்பது நாட்கள், இயேசு தமது சீடர்களுக்கு தோன்றினார். அவர்களை உறுதிப்படுத்தினார், போதித்தார், வழிநடத்தினார்,

இறையாட்சியின் உண்மையை ஆழமாக உணர்த்தினார். பின்னர் அவர் விண்ணக மகிமைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். ஆனால் அவர் தம் சீடர்களைத் தனிமையில் விட்டுச் செல்லவில்லை. பரிசுத்த ஆவியின் வல்லமையால் அவர்களை நிரப்பி, உலகமெங்கும் சென்று நற்செய்தியை அறிவிக்கும் திருப்பணியை அவர்களிடம் ஒப்படைத்தார்.

இன்றும் உயிருடன் நம்மிடையே இருப்பவரான கிறிஸ்துவை திறந்த இதயத்துடன் வரவேற்போம். அவருடைய அன்பிற்கும் உயிர்த்தெழுந்த வாழ்விற்கும் உண்மையான சாட்சிகளாக இருந்து, நமது குடும்பங்களில், சமூகங்களில் மற்றும் உலகெங்கும் இறையாட்சியின் மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் பகிர்ந்து வாழ தேவையான அருளை ஆண்டவரிடத்தில் வேண்டி மன்றாடுவோம்.

ஆகவே, விண்ணேற்றம் என்பது ஒரு பிரிவல்ல —அது ஒரு புதிய தொடக்கம்.

உயர்ந்து பறக்கவும், இறைவனின் ராஜ்யத்தை உலகில் வெளிப்படுத்தவும் ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

ஆண்டவரின் தூய ஆவியால் பலம்பெற்று,துணிவுடனும் மகிழ்ச்சியுடனும் நாம் வாழ முன் செல்வோம்.

**மறையுறை**

**ஆண்டவரின் விண்ணேற்றத் திருவிழா**

இறைபணி, இருப்பு, மகிழ்ச்சி ஆகியவற்றின் புதிய தொடக்கம்

சில ஆண்டுகளுக்கு முன், ஒரு சிறுமி தனது கையில் காகிதத்தால் செய்யப்பட்ட ஒரு விமானத்தை பிடித்துக்கொண்டு விளையாடிக் கொண்டிருந்தாள்.

அது மிகுந்த தூரம் பறக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். தனது முழு வலிமையையும் பயன்படுத்தி அதை வானத்தில் எறிந்தாள். சில நொடிகள்

அது உயரமாகப் பறந்தது. பின்னர் அவளது கண்களுக்கு தெரியாமல் மறைந்து போனது

அது கீழே விழுந்துவிட்டது என்று நினைத்து அவள் வருந்தினாள்.

அப்போது அருகில் நின்றிருந்த அவளது ஆசிரியர் மெதுவாகச் சொன்னார்:"அது கீழே விழவில்லை… இன்னும் மேலே பறந்துகொண்டேதான் இருக்கிறது. உன் கண்களுக்கு மட்டும் அது தெரியவில்லை. அதன் பயணம் இப்போதுதான் ஆரம்பமாகிறது."

இந்தச் சிறிய நிகழ்வே இயேசுவின் விண்ணேற்றத்தின் ஆழமான அர்த்தத்தை நமக்குப் புரிய வைக்கிறது. முடிவாகத் தோன்றுவது, உண்மையில் ஒரு புதிய தொடக்கம்.

உயிர்த்தெழுந்த இயேசு நாற்பது நாட்களுக்கு பின் விண்ணேற்றம் பெற்றபோது, சீடர்கள் ஒலிவ மலைமேல் நின்று வானத்தை அண்ணாந்து நோக்கிக் கொண்டிருந்தார்கள். அவரோடு நடந்தவர்கள், அவருடைய வார்த்தைகளை கேட்டவர்கள், அவருடைய அன்பை அனுபவித்தவர்கள் – இப்போது அவரை கண்களால் காண முடியாமல் போனதால், அவர்களின் உள்ளங்களில் ஆச்சரியம், குழப்பம், ஏக்கம் ஆகியவை கலந்து இருந்தன.

அப்போது வானதூதர்கள் அவர்களிடம் கூறினர்:"ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் இயேசு மீண்டும் வருவார். ஆனால் இப்போது நீங்கள் உலகின் எல்லைவரைக்கும் அவருடைய சாட்சிகளாக இருக்க வேண்டும்." என்று கூறினார்

விண்ணேற்றம் - இறைபணியின் புதிய தொடக்கம்

பறந்து மறைந்து போன அந்தக் காகித விமானம் போலவே, இயேசுவின் வாழ்க்கை விண்ணேற்றத்தோடு முடிவடையவில்லை; அது உலகம் முழுவதும் பரவத் தொடங்கியது. சீடர்கள் போதகர்களாக அல்ல, சாட்சிகளாக அனுப்பப்பட்டார்கள். அவர்கள் இயேசுவை பார்த்தவர்கள், அனுபவித்தவர்கள், அவரோடு வாழ்ந்தவர்கள்.

ஆனால் இன்றும் பலர் இறைவனைப் பற்றி பேசத் தயங்குகிறார்கள். காரணம் - இறைவனை தனிப்பட்ட அனுபவமாகச் சந்தித்ததில்லை. ஆனால் இயேசுவோடு உண்மையாக இணைந்து அனுபவிக்கும் ஒருவர், அவருடைய அன்பை மறைக்க முடியாது.

ஒரு பெண் தனது நோயுற்ற தந்தைக்காக தினமும் ஜெபித்தாள். ஒரு நாள் அவரது உடல்நிலை திடீரென மேம்பட்டது. அது ஒரு சாதாரண நிகழ்வு அல்ல; வாழும் இறைவனின் செயல் என்று அவள் உணர்ந்தாள்.

ஒரு இளைஞர் குழு சமூகச் சேவை இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க முயன்றது. ஆரம்பத்தில் அனைத்தும் செயல்பட முடியாமல் தடுமாறியது. பின்னர் அவர்கள் ஒன்றுபட்டு ஜெபித்து, தூய ஆவியாரை அழைத்தார்கள். அதன் பிறகு நல்ல யோசனைகள் தோன்றின; பலர் அந்த இயக்கத்தில

இணைந்தனர்; செயல்பட முடியாத நிலையில் இருந்த இயக்கம் செயல்பட சாத்தியமானது.

விண்ணேற்றம் நமக்குக் கற்பிப்பது இதுதான்:

தூய ஆவியின்றி இறைபணி பலவீனமாகும்; ஆனால் அவரோடு இணைந்தால் சிறிய செயல்கள்கூட உலகத்தை மாற்றும் சக்தி பெறும்.

விண்ணேற்றம் - துணிவுக்கும் இறைஇருப்பிற்குமான அழைப்பு

இயேசு சீடர்களை தனியாக விட்டுவிடவில்லை. மாறாக, தனது இறை பணியை அவர்களிடம

ஒப்படைத்தார். இயேசு இப்போது ஒரு இடத்தில் மட்டும் இல்லாமல், தூய ஆவியாரின் மூலம், திருச்சபையின் வழியாக, ஒவ்வொரு விசுவாசியின் இதயத்திலும் வாழ்கிறார்.

ஒரு இளம் பெண் தனது நகரில் ஏழ்மை நிலையை பார்த்து மனம் உடைந்தாள். “கிறிஸ்து ஆட்சி செய்கிறார்” என்ற நம்பிக்கையுடன் சில குழந்தைகளுக்கு உதவத் தொடங்கினாள். அந்தச் சிறிய முயற்சி பின்னர் பெரிய சமூகப்பணியாக வளர்ந்தது.

உயர்த்தப்பட்ட கிறிஸ்துவை நோக்கிப் பார்ப்பது நமக்குத் துணிவைக் கொடுக்கிறது. உலகம் இருளாக இருந்தாலும், அன்பின் சிறிய செயல்கள் ஒளியை பரப்புகின்றன.

விண்ணேற்றம் - நம்பிக்கையும் பார்வையும்

"விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. உலக முடிவுவரை நான் உங்களோடு எப்போதும் இருக்கிறேன்" என்று இயேசு உறுதியளிக்கிறார்.

போர், அநீதி, துன்பம், இயற்கை அழிவுகள் ஆகியவை நம்மை அச்சப்படுத்தினாலும், கிறிஸ்துவின் வெற்றி ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஒரு மறைமாவட்டக் கூட்டத்தில் பெரிய பிரச்சினை எழுந்தது. தீர்வு கிடைக்காதபோது, ஒரு வயதான குரு அமைதியாக பிரச்சினையின் தீர்வுக்காக ஜெபித்தார். சில நிமிடங்களில் சூழ்நிலை மாறி, பிரச்சனைக்கு நல்ல முடிவு கிடைத்தது. இறைவனின் சக்தி ஜெபத்திலும் நம்பிக்கையிலும் வெளிப்படுகிறது.

சொர்க்கம் - அது எங்கே உள்ளது?

ஒரு சிறுமியிடம், "உன் தங்கை சொர்க்கத்தில் இருக்கிறாள்" என்று கூறியபோது, அவள் மகிழ்ச்சியுடன் சொன்னாள்:"அப்படியானால் அவள் இப்போது இயேசுவோடு தினமும் விளையாடிக்கொண்டிருப்பாளே!"என்றாள்

சொர்க்கம் என்பது வானத்தின் தொலைவில் இருக்கும் ஒரு இடமல்ல.இறைவனோடு இணைந்து வாழும் நிரந்தர மகிழ்ச்சியே சொர்க்கம்.

விண்ணேற்றம் என்பது பிரிவின் நிகழ்வு அல்ல; அது புதிய இருப்பின் ஆரம்பம்.அது முடிவு அல்ல; பணியின் தொடக்கம்.அது மறைவு அல்ல; ஆழமான இருப்பு.

இயேசு நம்மைக் கைவிடவில்லை –நம்முள் வாழ்ந்து, நம்மூலம் உலகையே மாற்ற அழைக்கிறார்

ஆகவே, விண்ணேற்றம் என்பது ஒரு பிரிவல்ல –அது ஒரு புதிய தொடக்கம்.

உயர்ந்து பறக்கவும்,இறைவனின் ராஜ்யத்தை உலகில் வெளிப்படுத்தவும்ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

ஆண்டவரின் தூய ஆவியால் பலம்பெற்று,துணிவுடனும் மகிழ்ச்சியுடனும் நாம் வாழ முன் செல்வோம்.

இயேசு விண்ணகத்திற்கு உயர்த்தப்பட்டாலும்,"நான் எப்போதும் உங்களோடு இருக்கிறேன்" என்று உறுதியளிக்கிறார்.

ஒரு பெற்றோர் தங்கள் குழந்தைகளை வளர்த்து, ஒரு கட்டத்தில் அவர்களைத் தனித்து நிற்க அனுப்புவார்கள்.அதைப்போலவே, இயேசுவின் விண்ணேற்றம், அவருடைய இருப்பை உலகமெங்கும் பரப்பும் புதிய வழியாக மாறியது.

அந்தச் சிறுமி காகித விமானத்தை கான வானத்தை நோக்கிப் பார்த்தது போல,நாமும் நமது கண்களையும் இதயங்களையும் உயர்த்திப் பார்க்க வேண்டும்.

பயணம் இன்னும் தொடர்கிறது.நாம் ஆண்டவரின் சாட்சிகள்.தூய ஆவியால் பலப்படுத்தப்பட்டவர்கள்.அன்பு, நம்பிக்கை, மகிழ்ச்சி மூலம் சொர்க்கத்தை பூமிக்குக் கொண்டு வர அழைக்கப்பட்டவர்கள்.

ஒரு இளம் பெண் ஒருமுறை, "இயேசுவைப் பின்பற்றுவது மிகவும் கடினம் " என்று எண்ணினாள்.ஆனால் வாழ்க்கையின் நடுவில் – ஒரு புன்னகை, ஒரு உதவும் கை, ஒரு சிறிய ஜெபம் – இவற்றில் இறைவனின் இருப்பைக் கண்டாள்.

அப்போது அவள் உணர்ந்தாள்:இயேசுவைப் பின்பற்றுவது வானத்தில் அற்புதங்களைப் பார்ப்பதல்ல;இங்கேயும் இப்போதேயும், அவருடைய அன்பில் வாழ்வதே.

ஆகவே, விண்ணேற்றம் என்பது ஒரு பிரிவல்ல –அது ஒரு புதிய தொடக்கம்.

உயர்ந்து பறக்கவும்,இறைவனின் ராஜ்யத்தை உலகில் வெளிப்படுத்தவும்ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

ஆண்டவரின் தூய ஆவியால் பலம்பெற்று,துணிவுடனும் மகிழ்ச்சியுடனும் நாம் வாழ்வோம்.

ஆமென்

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai

==========================

For more Homilies and Reflections, **click here**

============================================================